

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

TUESDAY, AUGUST 01, 2023

**உள்ளார்ந்த தத்துவத்தைப் புரிந்துகொண்டு ஈடுபாட்டுடன் தர்மவழி நடக்கும்போது அதிக பயன் கிடைக்கிறது**
– தர்மபோதனை –

செவ்வாய்க்கிழமை ஒகஸ்ட் 01, 2023 | ஒளி: 09 கதிர்: 052 | பக்கம்: 07 | நகரப்பதிப்பு★ | FREE

## பாராளுமன்றத்தை கலைக்கவும்

**மேடைகளிலும் ஊடகங்களிலும் வீராப்பு பேசுவதை விடுத்து, பொதுத் தேர்தலுக்கு செல்லவும்**

**சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீரமானத்தில் சகல குப்பைகளும் ஓர் அணியில் திரளும்**



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினதும், ஐக்கிய தேசிய கட்சியினதும், தேசிய மக்கள் சக்தியினதும் தொகுதிக் கூட்டங்களில் தற்போது பல விதமான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. 70 சதவீதத்துக்கும் அதிகமான தொகுதி கூட்டங்களை நிறைவு செய்துள்ளதாகவும் அடுத்த தேர்தல்களில் தமது கட்சியே வெற்றி பெறும் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகிறார். அவ்வாறானால், பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்லுமாறு நாம் கூறுகிறோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணையில்லை என்று தெரிவித்த அவர், மேடைகளிலும் ஊடகங்களிலும் வெறுமனே வீராப்பு பேசுவதை விடுத்து, பாராளுமன்றத்தை கலைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டால், அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு தெரிவிக்கும் என்றார். மொட்டும் ஐக்கிய தேசிய கட்சியுமே தேர்தல்களுக்கு பயந்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை வழங்காது விட்டனர். கடன்களை மீள்செலுத்த முடியாவிட்டால், வாகன இறக்குமதிக்கான அனுமதியை வழங்காவிட்டால் ஆசிய அபிவிருத்தி வங்கி, சீனா போன்றவற்றின் நிதியுதவிகளை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் என்றார்.

தொடர்ச்சி P2

## QR அறிமுகத்தால் பாவனை குறைவு



தேசிய எரிபொருள் அனுமதி அல்லது QR குறித்த குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், இலங்கையில் மாதாந்த எரிபொருள் பாவனை 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டதாகவும் இதனால் எரிபொருள் இறக்குமதிக்கான செலவு குறைக்கப்பட்டு உள்ளதாகவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 25 வருடங்கள் மேலும் துன்பப்பட முடியுமா?

**திருட்டை நிறுத்துவதற்கும் நாட்டை வளமாக்குவதற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் தலைவர்களாக இருக்கமுடியாது**



மக்களை ஏமாற்றி நாட்டை வங்குரோத்து அடையந் செய்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு, நாட்டின் இறையாண்மை பற்றி ஒரு வார்த்தை கூட பேச உரிமை இல்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 'மஹதா' என்று உச்சரித்ததால் பாடகிக்கு எதிராக விசாரணை



2023 LPL தொடக்க விழாவில் தேசிய கீதத்தை இசைக்கும் போது, பிரபல பாடகி உமாரா சின்ஹவன்ச, ஒரு முக்கிய வரியை தவறாக உச்சரித்த காணொளி சமூக ஊடகங்களில் பரவியதைக் குறிப்பிட்டு, புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, சட்ட நடவடிக்கை எடுப்பதாக எச்சரித்துள்ளார்.

"ஒரு நாட்டின் தேசிய கீதம் அந்நாட்டின் கலாசாரம் மற்றும் அடையாளத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதால் யாரும் தேசிய கீதத்தை சிதைக்க முடியாது. எனவே, இவ்வாறான சம்பவங்களை ஒருபோதும் மன்னிக்க முடியாது" என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஹட்டனில் முட்டை ரூ.35



ஹட்டனைச் சேர்ந்தவர்கள் முட்டை ஒன்றை 35 ரூபாய்க்கு பெற்றுக்கொள்ள முடியும் என்று ஹட்டன் சதொச கிளையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் வெள்ளை முட்டை ஒன்று 59 ரூபாய்க்கும், கபில நிற முட்டை 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால், ஹட்டனைச் சேர்ந்த மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

## சட்டவிரோத மணலை பகிர்ந்தளிக்க ஆலோசனை



கைப்பற்றப்பட்ட மணலை நீதிமன்றத்தின் அனுமதியுடன் நியாயமான விலையில் பிரதேச மக்களுக்கு வழங்குதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தும் நோக்கில்,

தொடர்ச்சி P2

## மதுபானப் போத்தல்களை அடையாளம் காண செயலியை தயாரிக்கவும்



போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்களுடன் கூடிய மதுபானப் போத்தல்களை அடையாளம் காண்பதற்குப் புதிய செயலியொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறு வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இலங்கை மதுவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

தொடர்ச்சி P2

## சிறுநீரகத்தை அகற்றிய விவகாரம் விசாரணையை நடத்த கோரிக்கை




கொழும்பு, கொட்டாஞ்சேனையை சேர்ந்த 3 வயது சிறுவனின் ஒருபக்க சிறுநீரக செயலிழப்புக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது, அச்சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## அகதிகளாக 4 பேர் தமிழகத்தில் தஞ்சம்

■ ரொசேரியன் லெம்பட்



இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக புகலிடம் தேடி, வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகள் அகதிகளாக படகில் புறப்பட்டு தனுஷ்கோடி, அரிச்சல்முனை கடற்கரையை திங்கட்கிழமை (31) காலை சென்றடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி



நாட்டில் கோழி இறைச்சியின் விலை அன்றாடம் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி வழங்க தீர்மானித்துள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ திங்கட்கிழமை (31) தெரிவித்தார்.

## 4 மடங்கு அவலங்களை மக்கள் சந்திக்கின்றனர்



தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பொதுமக்கள் நான்கு மடங்கு அவலங்களை சந்தித்துள்ளதுடன் முப்பது வருடகால யுத்தத்தின் போது, சுகாதார சேவை இவ்வாறான வீழ்ச்சியை சந்திக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், திங்கட்கிழமை (31) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 65 மருந்துகள் நீக்கம்



இந்த வருடத்தின் கடந்த 7 மாதங்களில் மாத்திரம் தரம் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக 65 மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 100 இலட்சம் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 100 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வார் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஹிங்குராங்கொட பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்ற கூட்டம் ஒன்றில், அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், ஜனாதிபதி 100 இலட்சம் வாக்குகளை பெற்றுக் கொள்வார் என்பதில் எவ்வித சந்தேகமும் எமக்குக் கிடையாது.

தொடர்ச்சி P2

## சமஷ்டி அதிகாரப்பகிர்வை வலியுறுத்தி கவனயீர்ப்பு

■ வா.கிருஸ்ணா



ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கான மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை உறுதிசெய்யுமாறு

தொடர்ச்சி P2

## பியருக்கு அரிசி கொடுத்த அதிர்ச்சி

விலங்குத் தீவனம் மற்றும் பியர் தயாரிப்புகளுக்கு அரிசியைப் பயன்படுத்தவதை உடனடியாக நிறுத்துவதற்கு கமத்தொழில் அமைச்சு முடிவு செய்துள்ளது.

தற்போது நிலவுகின்ற வரட்சி நிலைமையால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் முகமாக, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கலைக்கவும்

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சகல குப்பைகளும் ஓர் அணியில் திரளும். மக்களுக்காக யார் கை தூக்குகின்றனர் மற்றும் கெஹலியவை பாதுகாக்க யார் கைதூக்குகின்றனர் என்பதை நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது.எந்த நிலைப்பாட்டை ஆளும் தரப்பிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் எடுக்கின்றனர் என்பதை பார்த்துக் கொள்ள முடியுமாக இருக்கும் என்றார்.

## பியருக்கு அரிசி கொடுத்த அதிர்ச்சி

இது தொடர்பாக ஜனாதிபதியின் உணவு பாதுகாப்பு குழுவிற்கு அறிவிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## 65 மருந்துகள் நீக்கம்

65 மருந்துகளில் இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளும் உள்ளதாகவும், 6 மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

## QR அறிமுகத்தால் பாவனை குறைவு

ஐக்கிய அமெரிக்க டொலர் நெருக்கடியில் நாடு இருந்தபோது, QR குறியீட்டை அறிமுகப்படுத்தியதன் பலன் காரணமாக மற்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கு டொலரை பயன்படுத்த முடிந்ததாகக் கூறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், QR அறிமுகப்படுத்தப்பட்டு ஓராண்டுக்குப் பிறகு 65 இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகிறது.

## சிறுநீரகத்தை அகற்றிய விவகாரம்...

சம்பவம் தொடர்பில் முழுமையாக ஆராயமால் பாதிக்கப்பட்டவர்களும் மருத்துவ தரப்பினரும் முடிவிற்கு வருவது தவறென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில்விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அதனால் மரணத்திற்கான காரணம் என்னவென்பதை அறிவதற்காக முழுமையான விசாரணைகள் இடம்பெறவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மருத்துவர்களின் கவனமின்மையே உயிரிழப்பிற்கு காரணமென உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்படாத சிறுநீரகமே அகற்றப்பட்டது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாகவும் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

## 25 வருடங்கள் மேலும் துன்பப்பட முடியுமா?

திருட்டை நிறுத்துவதும் அரசாங்கத்தின் வினைத்திறனை உருவாக்குவதும் இன்றியமையாத பணியாகும் என தெரிவித்த சம்பிக்க திருட்டை நிறுத்துவதற்கும் நாட்டை வளமாக்குவதற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் ஒரு நாட்டின் தலைவர்களாக இருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் அநுராதபுரம் மாவட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆவணத்தின் பிரகாரம் 2032 இல் நாடு நெருக்கடியில் இருந்து விடுபட்டு, 2048இல் நாடு அபிவிருத்தி அடையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் மேலும் 25 வருடங்கள் துன்பப்பட முடியுமா என கேள்வி எழுப்பினார்.

மூன்று வருடங்களுக்குள் நாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய குடியரசு முன்னணிக்கு இருப்பதாகத் தெரிவித்த ரணவக்க, நாட்டில் உள்ள மூன்று அடிப்படைப் பிரச்சினைகளான மருந்து, வைத்தியதுறை சேவை, உணவுப் பிரச்சினை, எரிசக்திப் பிரச்சினை, போக்குவரத்து, மின்சார பிரச்சினை என்பன முதலில் தீர்க்கப்படும் என்றார்.

'முதலில் நாட்டை கட்டியெழுப்புவோம்' என்ற நம்பிக்கையை நாட்டின் தொழில் வல்லுநர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் சம்பிக்க தெரிவித்தார்.

## 100 இலட்சம் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கும்

நாடு வங்குரோத்து அடைந்து விட்டதாக பலர் குறிப்பிட்ட போதிலும் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து ரணில் விக்கிரமசிங்க மீட்டு எடுத்து வருகிறார்.

வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக நாட்டை இன்னும் ஒரு மாத காலப்பகுதியில் மீட்க முடியும் என்றார். சிலர் தேர்தல் நடத்தவில்லையா எனக் கேள்வி எழுப்புகின்றனர். தேர்தல் நடத்தியதால் தான் மக்கள் வீதியில் வரிசையில் காத்திருக்க நேரிட்டது என்றார்.

எனினும், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் நூறு இலட்சம் வாக்குகளைப் பெற்று, வரலாற்று ரீதியான வெற்றியை ஈட்டுவார் என குறிப்பிட்டுள்ளார்.

## அகதிகளாக 4 பேர் தமிழகத்தில் தஞ்சம்

தகவல் அறிந்த கடற்கரையோர பொலிஸார் அவர்களை மீட்டு, மண்டபம் கரையோர பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 269 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






### இரண்டு கிலோ மீற்றர் தூரம்:

## 18 நிமிடங்களில் நடந்து உலக சாதனை படைத்த சிறுமி

■ எஸ் சதீஸ்

மஸ்கெலியா ப்ரௌன்லோ தோட்டத்திலிருந்து மஸ்கெலியா பொலிஸ் நிலையம் வரை இரண்டு கிலோமீற்றர் தூரத்தினை மஸ்கெலியா சென் ஜோசப் ஆரம்பப்பிரிவு பாடசாலையில் தரம் 01இல் கல்வி பயிலும் விக்னேஸ்வரன் சஸ்மிதா என்ற சிறுமி 18 நிமிடங்களில் நடந்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். இந்த நிகழ்வு திங்கட்கிழமை (31) இடம்பெற்றது

சாதனைக்கான நிகழ்வை மஸ்கெலிய மாவட்ட வைத்திய அதிகாரி ஆரம்பித்து வைத்தார். இதன் போது குறித்த இந்த சிறுமிக்கு வீதியின் இரு புறங்களிலும் மக்கள் பலத்த ஆரவாரத்தை வழங்கினர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சோழன் இலங்கை கிளைத்தலைவர் யூட் நிமலன் பிரதேச பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னால் பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## மதுபானப் போத்தல்களை அடையாளம் காண செயலியை தயாரிக்கவும்

மதுவரித் திணைக்களத்துக்குக் களப்பயணமொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ. த சில்வா மற்றும் காமினி வலேபொட ஆகியோர் இணைந்துகொண்டனர்.

போலியான தயாரிப்புகளைத் தடுப்பதற்காக மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதும், சந்தையில் போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் பயன்பாட்டில் இருப்பதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். போலியான ஸ்டிக்கர்களை அடையாளம் காண்பதற்கான முறைமையொன்று திணைக்களத்திடம் இல்லையென்றும் இதன்போது இனங்காணப்பட்டது.

அத்துடன், கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பு உள்ளிட்ட காரணிகளால் மதுபானம் ஊடாகக் கிடைக்கப்பெற்ற வருமானம் வீழ்ச்சி கண்டிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியதுடன், மதுபானங்களுக்கான விலையை அதிகரிக்கும் முன்னர் கேள்விக்கான நெகிழ்ச்சி கணிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அதுமாத்திரமன்றி மதுபானம் மீதான வரி அதிகரிப்புகளை மேற்கொள்ளும்போது உரிய கணக்கெடுப்புகளை ஆதாரமாகக் கொண்டு நிதி அமைச்சுக்கு உரிய ஆலோசனைகளை திணைக்களத்தால் வழங்க வேண்டும் எனக் குழு வலியுறுத்தியது.

அத்துடன், மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தும் அரிசி உள்ளிட்ட மூலப்பொருட்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் குழு, மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியது.

## சமஷ்டி அதிகாரப்பகிர்வை வலியுறுத்தி கவனயீர்ப்பு

வலியுறுத்தி மட்டக்களப்பில் கவனஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபி சதுக்கத்தில் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கவனஈர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை (31) முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கான மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வினை வழங்குமாறு வலியுறுத்தும் வகையில் கடந்த ஆண்டு வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுவந்த 100நாள் போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தியினை முன்னிட்டு இந்தக் கவனஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் வி.லவகுசராசா தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்துகாணாமல் ஆக்கப்ப்ட்டவர்களின் உறவினர்கள்,பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

வடகிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகியுள்ள நிலையில் அவர்களுக்கு வழங்ககூடிய ஒரு நிவாரண அரசியல் தீர்வாக சமஷ்டி ரீதியான ஆட்சியை தமிழ் பேசும் மக்கள் வேண்டி நிற்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வடகிழக்கு தீர்வினை வழங்கப்போவதாக ஜனாதிபதி பல்வேறு கூட்டங்களை நடத்துகின்றபோதிலும் இதுவரையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத நிலை காணப்படுவதாகவும் ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு சர்வதேசத்தையும் தமிழ் பேசும் மக்களையும் ஏமாற்றும் வகையில் உள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## சட்டவிரோத மணலை பகிர்ந்தளிக்க ஆலோசனை

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த சில தினங்களாக பொலிஸாரினால் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே, கடற்றொழில் அமைச்சரின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வை. தவநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சரின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் திங்கட்கிழமை (31) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 28ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைவாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையுடன், சட்டவிரோதமான மணல் அகழ்வை தடுப்பதற்கும் சட்டவிரோதமான முறையில் மணலை பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து மீட்பதற்குமான விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் முதல் கட்டமாக முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை போன்றபகுதிகளில் சுமார் 80 லோட் மணல் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், கைப்பற்றபடுகின்ற மணலை நீதிமன்றில் பாரப்படுத்தி, நீதிமன்றின் அனுமதியுடன் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நியாயமான விலையில் பகிர்ந்தளிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசித்து வருகின்றார்" என்று தெரிவித்தார்.

## 'மஹதா' என்று உச்சரித்ததால் பாடகிக்கு எதிராக விசாரணை

ஒரு தேசிய கீதத்தை 'ரீமிக்ஸ்' செய்யவோ அல்லது 'ரப்' இசை போல இசைக்கவோ முடியாது. எனவே, சமீபத்தில் நடந்த குறித்த சம்பவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சு ஆலோசித்து வருகிறது.

தேசிய கீதத்தை இசைப்பதற்கென ஒரு தரம் உள்ளது. அவ்வகையான காணொளி யூடியூப்பில் இருக்கின்றது. இந்தப் புதிய போக்கால், எதிர்காலத்தில் நிர்வாணமாக நின்று தேசிய கீதம் இசைக்கப்பட்டாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை" என அமைச்சர் தெரிவித்தார்.

பிரபல பாடகி, உமாரா சின்ஹவன்சா 2023 LPL தொடக்க விழாவில் தேசிய கீதத்தை பாடும் போது, ஒரு வரியை தவறாக உச்சரித்ததால் சமூக ஊடகங்களில் குறித்த சம்பவம் பரபரப்பாகியது.

அந்தக் காணொளியில், 'நமோ நமோ மாதா' என்பதற்குப் பதிலாக 'நமோ நமோ மஹதா' என்று அவர் மீண்டும் மீண்டும் பாடியுள்ளார். இதனால் சமூக ஊடகப் பாவனையாளர்கள் மத்தியில் இது ஒரு சர்ச்சையைத் தூண்டியது. இது அனைத்து சமூக ஊடக தளங்களிலும் தற்போதைய ட்ரெண்டிங் மஹதா என்ற ஹேஷ் டேக்கையும் ஏற்படுத்தியுள்ளது.

## 4 மடங்கு அவலங்களை மக்கள் சந்திக்கின்றனர்

அரசு மருத்துவமனைகளின் நடைமுறைகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும், நம்பகத்தன்மை குறித்த கேள்வி எழுந்துள்ளதாக தெரிவித்த பீரிஸ், வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு காரணமாக நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் உள்ளதை கணக்காய்வாளர் அறிக்கைகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலவச சுகாதாரம் என்பது தற்போது அவப்பெயர் பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், ஸ்தம்பிதமடைந்துள்ள தற்போதைய அரசாங்கத்தை வெளியேற்ற அனைவரும் அணிதிரள வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

> **ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்ட விதம் அருவருப்பானது; 'அஸ்வசும' அரசாங்கத்தின் புரளி; வெளிப்படைத் தன்மை இல்லாத வேலைத்திட்டம்**

ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்ட விதம் அருவருப்பானது எனவும், 'அஸ்வசும' என்பது அரசாங்கத்தின் புரளி எனவும், வெளிப்படைத்தன்மை இல்லாத வேலைத்திட்டம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்முனையில் மோட்டார் சைக்கிளில்

# பொதுமக்களை அச்சுறுத்தும் மர்மநபர்கள்

பாறுக் ஷிஹான்

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள், பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து, அச்சுறுத்தி வரும் சம்பவங்கள் கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

சாய்ந்தமருது, பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ளடங்குகின்ற பிரதான வீதிகள், உள்ளக வீதிகள் என்பவற்றில் இனந்தெரியாத நபர்கள், தலைக்கவசம் இன்றி பொதுப்போக்குவரத்தை குழப்பும் வகையில், அதிசக்தி வாய்ந்த இயந்திரம் கொண்ட மோட்டார் சைக்கிளில் வருகை தந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் உயர்அதிகாரிகளின் கவனத்துக்கு பாராளுன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உட்பட சிலர் கொண்டுவந்துள்ளதுடன் முறைப்பாடுகளையும் வழங்கியுள்ளனர்.

இவர்கள், வீதி போக்குவரத்து சட்டத்தை மதிக்காமல், பாடசாலை, அலுவலக நாள்களில் மிக வேகமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்தி, பொதுப்போக்குவரத்தை சீர்குலைக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



## கடலாமைகளுடன் இருவர் கைது

பு. கஜிந்தன்

நான்கு கடலாமைகளை பட்டாரக வாகனத்தில் கொண்டு சென்ற இருவரை, மானிப்பாய் பொலிஸார் நேற்று (31) காலை கைது செய்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது; மானிப்பாய் பகுதியில் வீதி போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மில்றோய் உட்பட்ட போக்குவரத்து பிரிவு பொலிஸார் பட்டாரக வாகனமொன்றை வழிமறித்தனர்.

வாகனத்தின் பின்புறத்தில் சாக்கு மூடைகள் காணப்பட்டன. அவற்றைச் சோதனையிட்டபோது நான்கு கடலாமைகள் உயிருடன் கைப்பற்றப்பட்டன. இதையடுத்து 47, 32 வயதான கொழும்புத்துறை மற்றும் இளவாலை பகுதியை சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்தனர். கடலாமைகளை விற்பனைக்கு கொண்டு சென்றதாக கைதானவர்கள் தெரிவித்தனர்.

## அராலியில் கடல்நீர் தடுப்பு மணல் மேட்டில் மணற்கொள்ளை

எம். றொசாந்த்

கடல் நீர் உட்புகாத வகையில் வயல் வெளிகளை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மண் மேடுகளில் இருந்து, சட்டவிரோதமான முறையில் மண்ணை வெட்டி எடுத்துச் சென்ற டிப்பர் வாகனங்களில் ஒன்றை, பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

அராலி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: அராலியில் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் உள்ள வயல் வெளிகளுக்குள், கடல் நீர் உட்புகாத வகையில் மணல் மேடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த மணல் மேட்டில் உள்ள மணலை, ஐந்து டிப்பர் வாகனங்களில் வந்தவர்கள், டிப்பரில் மணலை ஏற்றிக்கொண்டு இருந்த வேளை, வயல் வேலைக்கு சென்றவர்கள், அவர்களிடம் கேட்ட போது, "அனுமதி பெற்று, வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் அறிவித்து விட்டுத்தான் மணல் அகழ்கின்றோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட வயல் வேலைக்கு சென்றவர்கள், கிராம சேவையாளருக்கும் ஊர் இளைஞர்களுக்கும் அறிவித்துள்ளனர். அங்கு சென்ற கிராம சேவையாளரும் சில இளைஞர்களும் அவர்களிடம் அனுமதி பத்திரத்தை கோரிய போது, அவற்றை எடுத்து காட்டுவது போன்று பாசாங்கு செய்து, டிப்பர் வாகனங்களை இயக்கி, தப்பி ஓடினர். அதில் ஒரு டிப்பர் வாகனத்தை இளைஞர்கள் மடக்கி பிடித்து, வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

"கடலை அண்டிய பகுதிகளில், எமது வயல் நிலங்கள் இருப்பதால், மழைக் காலங்களில் கடல் நீர் வயலுக்குள் உட்புகாதவாறு மணல் மேடுகள் அமைத்துள்ளோம். அதனை இவ்வாறு வெட்டி எடுத்து சென்றால், வயலுக்குள் கடல் நீர் உட்புகக் கூடிய அபாயம் உள்ளது. கடல்நீர் உட்புகுந்தால், வயல்களில் பயிர் செய்ய முடியாமல் மாறிவிடும். அதுமாத்திரமல்ல, ஊருக்குள் இருக்கும் நீர் நிலைகளும் உப்பு நீராக மாறக் கூடிய அபாயம் உள்ளது. மணல் மேட்டை வெட்டியவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தப்பிச் சென்றவர்களையும் கைது செய்யவேண்டும்" என மக்கள் தெரிவித்தனர்.



## நூல்வெளியீடு

எஸ். தில்லைநாதன்

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடியை சேர்ந்த சைவப்புலவர் அ. இராஜரட்ணத்தால் எழுதப்பட்ட 'சைவசமய வாழ்வியலும் ஆன்மிகமும்' எனும் நூல்வெளியீட்டுவிழா ஞாயிற்றுக்கிழமை(30) நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

உடுவை எஸ். தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் குரு ராதாகிருஷ்ணன் குருக்கள், நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜாவும், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் 'செஞ்சொற்செல்வர்' கலாநிதி ஆறு. திருமுருகனும் வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவராகிய சீ.வீ.கே சிவஞானமும் கலந்து சிறப்பித்தனர்.



## சந்திப்பு

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஸ், திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில், ஆளுநர் செந்தில் தொண்டமானை மரியாதை நிமிர்த்தம் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.

## நிர்வாணமாக்கி தங்க நகை அபகரிப்பு

18 வயதான இளைஞனின் ஆடையை கழற்றி, அவனை முழுமையாக நிர்வாணமாக்கி, அவர் அணிந்திருந்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவமொன்று புளத்சிங்கள பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோவின்ன பகுதியைச் சேர்ந்த இளைஞன், மாலை நேர தனியார் வகுப்பை முடித்துக்கொண்டு பஸ் தரிப்பிடத்தில் சனிக்கிழமை (29) பஸ்ஸூக்காக காத்திருந்துள்ளார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர், தான் பொலிஸ் அதிகாரி எனவும், விசாரணைக்காக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறி, தன்னுடைய மோட்டார் சைக்கிளில் அவ்விளைஞனை ஏற்றியுள்ளார். அவர், மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு செலுத்தாது இறப்பர் தோட்டத்துக்கு செலுத்தியுள்ளார். அங்கு வைத்து இளைஞனை அச்சுறுத்தி ஆடைகளை கழற்றி, கைகளை கட்டிவிட்டு, அவர் அணிந்திருந்த தங்க நகையை அபகரித்துச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட இளைஞன் தனக்கு நேர்ந்ததை பெற்றோரிடம் தெரிவித்ததன் பின்னர், பெற்றோர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், மேலதிக விசாரணைகளை புளத்சிங்கள பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கட்டுநாயக்கவில் கசிப்பு சிக்கியது



கட்டுநாயக்கவின் ஹினடியன பிரதேச கால்வாய் பகுதியில் காணப்பட்ட கசிப்பு வடிக்கும் இடத்தை சுற்றிவளைத்த கட்டுநாயக்க பொலிஸார், சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான கசிப்பு, கோடா மற்றும் வடிகட்டும் உபகரணங்களைக் கைப்பற்றியதுடன் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது, 405,000 மில்லி லீற்றர் கசிப்பு, ஸ்பிரிட் அடங்கிய 12 கலன்கள் 52,92,000 மில்லி கிராம் கோடா அடங்கிய 28 பீப்பாய்களையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

ஹினடியன பகுதியைச் சேர்ந்த 50 வயது மற்றும் 35 வயதுடைய இருவைரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## வடமாகாணத்தில் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆலோசனை



CII-VIF குழுவொன்று வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் மற்றும் அரசாங்க அதிகாரிகளை சந்தித்து, வட மாகாணத்தில் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளவேண்டிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்தே இந்தக் குழு வடமாகாணத்துக்கு விஜயம் செய்திருந்தது.

மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புகள் இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பல துறை பிரதிநிதிகள், மரபுசார் போன்ற துறைகளின் நிபுணர்கள் மற்றும் தொழிற்றுறை தலைவர்கள் இந்தக் குழுவில் உள்ளடங்கி இருந்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளவாடங்கள், உட்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியவை மேலே குறிப்பிட்ட பகுதிகளில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தன. இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதேவேளையில், பகிரப்பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகார சபை, முதலீட்டு சபை, கூட்டுறவு, பாற்பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.



# நிலவும் வெப்ப அலை தீவிரமானால் உணவு நெருக்கடி தீவிரமாகலாம்

இந்தியாவில் பல மாநிலங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு, கடும் மழை காரணமாக விவசாய நிலங்கள் வெள்ளக்காடாகின. இதனையடுத்து அரிசி ஏற்றுமதிக்கு அந்நாடு தடைவிதித்தது. இதனால், அமெரிக்க உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுமென்ற அச்சத்தில், அங்கு அரிசியை மூடை, மூடையாக நுகர்வோர் கொள்வனவு செய்ததை அவதானித்திருப்போம்.

நமது நாட்டை பொறுத்தவரையில் சிறு மற்றும் பெரும் போகங்களில் அறுவடை செய்யப்படும் அரிசி, நாட்டு மக்களின் நுகர்வோருக்கு போதுமானதாக இல்லை. இதனால் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அரிசி உற்பத்தியில் தன்னிறை அடைந்த நாடாக மாற்றுவோமென, ஆட்சிகளில் இருந்தோர், 'தம்பட்டம்' அடித்தாலும், அதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தில் எடுத்த, தவறான சில தீர்மானங்களால் நெல் பயிரிட்ட விவசாயிகளும் ஏனைய விவசாயிகளும் கடுமையான பாதிப்புக்கு முகங்கொடுத்தனர். இருந்த தங்க நகைகளை அடகுவைத்து, விவசாயம் செய்தவர்கள் முழுமையாக கைவிட்டனர். இதனால், போதியளவான அறுவடை கிடைக்கவில்லை. வருவாயை விடவும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்திருந்தன.

விவசாயத்தை பொறுத்தவரையில், காலநிலை முக்கியமானது. பருவத்தை அறிந்தே விவசாயிகள் பயிரிடுவர். திடீரென ஏற்படும் வானிலை மாற்றத்தால், பல இழப்புகளை விவசாயிகள் சந்தித்துள்ளார்கள். இந்நிலையில், நாட்டின் வெப்பநிலை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இது, ஓகஸ்ட் மாதம் இறுதி வரையிலும் நீட்டிக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில், வெப்பநிலை உயர்ந்து வரும் நிலையில், தற்போதைய சூழல்,"பூமி கொதித்துக் கொண்டிருக்கும் காலம்" என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். "காற்றை சுவாசிக்க முடியவில்லை", "வெப்பத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"காலநிலை மாற்றத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது" எனத் தெரிவித்துள்ள குட்டரஸ், "இது ஆரம்பமாகும்; எதிர்காலம் கடுமையாக இருக்கும்" என எச்சரித்துள்ளார். இந்நிலையில் கருத்துரைத்துள்ள பொருளாதார நிபுணர்கள், "உலகம், உணவு நெருக்கடியின் மோசமான நிலைமையை உணரலாம்" என்றும் எதிர்வு கூறியுள்ளனர்.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான யுத்தத்தால், 'கருங்கடல் தானிய ஒப்பந்தம்' காலாவதியான நிலையில், இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இது பாரிய உணவு நெருக்கடியை உலகளவில் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தற்போது நிலவும் வெப்ப அலை நீட்டிக்குமாயின், அந்தக் காலநிலை சீர்கேடு, உலக உணவு நெருக்கடிக்கு வழிசமைக்கும். ஆகையால், உணவை வீணாக்காமல், தேவையான அளவு மட்டுமே பயன்படுத்துவதே காலத்தின் தேவையாகும். அத்துடன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதும் சுற்றுச் சூழல் தொடர்பில் பொறுப்புடன் நடந்து கொள்வதும் நமது எல்லோருடைய கடமையுமாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# மருத்துவ தவறுகளுக்கு யார் பொறுப்பு?

**மொஹமட் பாதுஷா**

மக்கள், வைத்தியத் துறையை நம்புவதைப் போல, உலகில் வேறு எதையும் நம்புவதில்லை. கண்கண்ட தெய்வங்களாகவே வைத்தியர்கள் பார்க்கப்படுகின்றார்கள். கடவுள் நம்பிக்கை இல்லாதவன் கூட, வைத்தியரை ஒரு கட்டத்தில் நம்பிவிடுகின்றான்.

வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டத்தில், மருத்துவம் அல்லது நோய் குணமாக்கல் என்பது மிகவும் உன்னத சேவையாக என்றும் இருக்கின்றது. அந்த வகையில், உலகெங்கும் நாள்தோறும் இலட்சக் கணக்கான மக்கள் மருத்துவ சேவையால் தமது இன்னுயிரைக் காத்துக் கொள்கின்றனர். இதற்காக மருத்துவத்துறை சார்ந்தோர் செய்கின்ற அர்ப்பணிப்பு அளப்பரியது.

தமது விருப்பு வெறுப்புகள், உடல்நிலை, மனநிலை எல்லாவற்றையும் ஒருபுறம் வைத்துவிட்டு, தம்மை நம்பி வரும் நோயாளிகளுக்காக சேவையாற்றியாக வேண்டிய கட்டாயத்தில் இவர்கள் இருக்கின்றார்கள். கொவிட்-19 பெருந்தொற்று காலத்திலும் அவர்களது தியாகங்களை உலகம் கண்டு வியந்தது.

ஆனால், நாள்தோறும் இலட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற சமகாலத்தில், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வைத்தியசாலையில் இறந்து கொண்டும் இருக்கின்றன. சிகிச்சை பலனின்றி இறப்போர் இதில் அதிகம் பேர் என்று கூறலாம். மருத்துவத் தவறுகளாலும் அவ்வப்போது இறப்புகள் இடம்பெறுகின்றன.

கடந்த பல வருடங்களாக, இலங்கையில் மருத்துவத் தவறுகள் இடம்பெறுகின்றன. மருத்துவத் தவறுகள், பராமுகம், போதிய விடய அறிவின்மை, திட்டமிட்ட சதிச் செயல்கள் எனப் பலதரப்பட்ட காரணங்களால், உடல் உபாதைகளும் பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. இதன் உச்சக்கட்டமாக மரணம் சம்பவிக்கின்றது.

ஆனால் இவையெல்லாம் பொதுவாக ஒரு குடும்பத்தின், ஓர் ஊரின் விவகாரமாக பார்க்கப்படுவதாலும், ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலும், தேவை ஏற்பட்டால் வைத்தியசாலை நிர்வாகம் அதனை மாற்றியமைத்துக் கொள்ள ஏதுவான களநிலைமைகள் இருப்பதாலும் அல்லது ஒரு கட்டத்தில் அக்குடும்பம், முயற்சிகளை கைவிட்டு விடுவதாலும் இழப்புகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இந்த வரிசையில்தான், கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட ஹம்தி என்ற சிறுவன் உயிரிழந்த சம்பவம் இப்போது பேசுபொருளாகி உள்ளது. ஒரு சிறுநீரகத்தை மாற்றுவதற்காகவே அவர் அனுமதிக்கப்பட்டதாகவும், ஆனால் தவறுதலாகவோ அல்லது திட்டமிட்டோ இரண்டு சிறுசீரகங்களும் அகற்றப்பட்ட நிலையில், அச் சிறுவன் மரணமடைந்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. ஹம்தி முதலும் அல்ல கடைசியுமல்ல; இதேபோல், மருத்துவத் தவறுகள் அல்லது மருத்துவத்துறை தர்மங்களுக்கு அப்பாற்பட்ட காரியங்களின் பட்டியலும் மிக நீளமானது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான போலி மருத்துவர்கள் இருப்பதாக அரச அறிக்கைகளே கூறுகின்றன. கடமைக்கு சரியாக சமூகமளிக்காத வைத்தியர்கள், நேரம் பிந்தி வரும் மருத்துவ பணியாளர்கள், கவனயீனமாக செயற்படுகின்ற வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள், பணம் உழைக்கும் நோக்கத்தை மட்டுமே இலக்காகக் கொண்ட வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவர்கள் என பலதரப்பட்ட வகையறாக்களும் உள்ளன.

மருத்துவ தொழிலை கண்ணியமாகவும் மனச்சாட்சியுடனும் கடவுளுக்குப் பயந்தும் செய்கின்ற எத்தனையோ வைத்தியர்கள், மருத்துவப் பணியாளர்கள் இருக்கின்றார்கள். மனிதர்கள் என்ற வகையில், அவர்களின் கைகளாலும் தவறுகள், சிறிய குழறுபடிகள் இடம்பெறலாம் என்பது யதார்த்தமானது. அவற்றுக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றாலும் கூட, அது வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கப்படலாம்.

ஆனால், திட்டமிட்டு அல்லது கவனயீனமாக நடக்கின்ற தவறுகள் அவ்விதம் நோக்கப்பட முடியாது. தம்மை நம்பி வருகின்ற ஒரு நோயாளியின் நோயைக் குணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்கு அப்பாலான உள்நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற எந்த மருத்துவ சேவையையும் இந்த வகைக்குள்ளேயே உள்ளடக்க வேண்டியிருக்கின்றது.

மருத்துவத்தை ஒரு சேவையாக பார்க்காமல், அதனை ஒரு வியாபாரமாக மாற்றியுள்ள நூற்றுக்கணக்கான தனியார் வைத்தியசாலைகளும் ஆயிரக்கணக்கான வைத்தியர்களும் இங்கு கண்காணிக்கப்பட வேண்டியவர்கள். அரச வைத்தியசாலைகளில் நம்பிக்கை இழந்து, தனியார் வைத்தியசாலைகளை நோக்கி மக்களை அலையவிட்டதற்கு காரணம், அப்படிப்பட்டவர்களின் அர்ப்பணிப்பற்ற பணியாகும்.

அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற ஆயிரக்கணக்கான வைத்தியர்களுக்கு பின்னால் ஒழிந்து கொண்டு இருக்கின்ற இவ்வகையான சில வைத்தியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களால் மொத்த மருத்துவத் துறையும் சிலவேளைகளில் தலைகுனிந்து நிற்கின்றது. சிறுநீரகங்கள் இரண்டையும் பறிகொடுத்து, உயிரிழந்த ஹம்தி விடயத்திலும் அதுதான் நடந்திருக்கின்றது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான போலி மருத்துவர்கள் இருப்பதாகவும் அவர்கள் ஏதோ ஒருவகையில் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசாங்கம் பல வருடங்களாக கூறி வருகின்றது. ஆனால், ஒரு நூறு போலி வைத்தியர்களையாவது கைது செய்து தண்டித்ததாக அறியக் கிடைக்கவில்லை.

சில வைத்தியசாலைகளில் பௌதீக வளப் பற்றாக்குறை, மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கின்றது. அதுவெல்லாம் ஒருபுறமிருக்க எல்லா வளங்களும் இருந்தும் கூட, முறையாக சேவையாற்ற தவறுகின்ற நிலைமைகளும் உள்ளன. சில வைத்தியர்கள் கடமையை கடமையாகச் செய்வதில்லை. அரச மருத்துவமனைகளை விட, தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று மேலதிகமாக உழைப்பதற்காக ஆலாய்ப் பறக்கின்றனர்.

அதேபோன்று, சில வைத்தியசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள், நோயாளிகள் விடயத்தில் கவனயீனமாகவும் பொறுப்பற்ற தன்மையுடனும் நடந்து கொள்வதை கண்கூடாகவே கண்டிருக்கின்றோம். இதுவெல்லாம் மருத்துவத் தவறுகளுக்கே இட்டுச் செல்கின்றன.

பல சத்திரசிகிச்சைகள் வெற்றியளிக்காமல் போயிருக்கின்றன. எத்தனையோ சிகிச்சைகள் பலனின்றி போயிருக்கின்றன. இதில் எல்லாம் பிரச்சினையில்லை. வைத்தியர்களும் அங்குள்ள பணியாளர்களும் முழு முயற்சி செய்தும், ஒருவரைக் காப்பாற்ற, குணப்படுத்த முடியவில்லை என்றால், அதற்காக வைத்தியவர்களை குறைகாண முடியாது.

ஆனால், பெரிய மருத்துவத் தவறுகள் மற்றும் கவனயீனமான செயற்பாடுகளால் ஏற்படுகின்ற இழப்புகள் பாரதூரமானவை ஆகும். அதுமட்டுமன்றி, வியாபார நோக்கத்துடன் அல்லது மோசடி அடிப்படையில் இடம்பெறுகின்ற சிகிச்சைகள், அதற்குப் பின்னால் உள்ள 'மாபியா' எல்லாம் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. சிறுவன் ஹம்தியின் மரணமும் அவ்வகை சார்ந்ததாகவே நோக்கப்படுகின்றது.

இலங்கையில் சிறுநீரக வர்த்தகம் இடம்பெறுவதாக ஏற்கெனவே செய்திகள் வெளிவந்தன. அதுபோல ஏனைய உடல் உறுப்புகளை கடத்தும் மோசடி வியாபாரங்களும் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகின்றன.

ஆனால், இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை. எதிர்க்கட்சிகளும் மக்கள் பிரதிநிதிகளும் அதற்காக முன்னிற்கவில்லை. சுகாதாரத் துறையிலும் ஊழலும் இனவாதமும் புகுந்துள்ளதை கொரோனா ஜனாஸா எரிப்பின் போதே தெளிவாகக் கண்டோம். இப்படியான சூழ்நிலையில், இந்த மருத்துவ தவறுகளை திருத்துவது சாத்திமற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது.

இலங்கை சமூகத்திடையே பொதுவாக தவறுகளை தட்டிக் கேட்கின்ற தன்மை மிகக் குறைவாகும். தவறுகளை, சதி முயற்சிகளை முறியடிப்பதற்காக தொடர்ச்சியாக போராடுகின்ற போக்கு அறவே இல்லை.

அரசியல்வாதி, வியாபாரி, ஆசிரியர், வைத்தியர், அரச அதிகாரி என எல்லா தரப்பினரும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். எனவே, தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக, மருத்துவதுறை சார்ந்தோர் விமர்சிக்கப்படக் கூடியவர்கள் அல்லர் என்ற ஒரு மாயை கட்டமைக்கப்பட்டுள்ளது; அது நீக்கப்பட வேண்டும். மருத்துவர்கள் மட்டுமன்றி எல்லா தொழில் செய்வோரும் அதனைச் சரிவரச் செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்குமான கதவுகள் திறக்கப்பட வேண்டும்.


அந்தவகையில், நாட்டில் தவறு செய்கின்ற தரப்பினரைத் திருத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? பொறுப்பு வாய்ந்தவர்கள் பொறுப்புக் கூறலுடன் செயற்படுவதை உறுதி செய்வதற்கு தொடர்ச்சியாக மக்கள் எந்த வகையில் போராடியிருக்கின்றார்கள் என்ற கேள்விகள் எழுகின்றன.

இலங்கை மக்கள், ஒரு சமூகமாக முன்னெடுத்த போராட்டங்களில் அதிக காலம் நீடித்த போராட்டம் 'அரகலய' மட்டும்தான். அதுவும் கூட, ஐந்தாறு மாதங்களில் அடங்கிப் போனது. மற்றெல்லா கோஷங்களும் இரண்டு வாரங்களுக்குள் அடங்கிப் போவதுதான் வாடிக்கையாகவுள்ளது.

ஆட்சியாளர்கள் சரியில்லை என்றோம்; பஸ் விபத்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோம்; மாணவர்களை துஷ்பிரயோகம் செய்கின்ற ஆசிரியர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்றோம்; கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றோம்; ஆசிரியர்களை மதிக்காத மாணவர்களை திருத்த வேண்டும் என்றோம்; இயற்கை வளத்தை சூறையாடுகின்ற வியாபாரிகளை சிறையிலடைக்க வேண்டும் என்றோம்; ஆசிரியத் தொழில் முதல் வைத்தியதுறை வரை எல்லாவற்றையும் வியாபாரமாக்கும் போக்கை மாற்ற வேண்டும் என்றோம்.....

இந்த எல்லாப் போராட்டங்களும் ஆகக் கூடியது ஒரு மாதம் வரையாவது நீட்டிக்கவில்லை. இவை எவற்றுக்கும் நல்ல தீர்வு கிடைக்கவும் இல்லை. அதற்கு இடையில் வேறு ஏதாவது ஒரு பிரச்சினை, விவகாரம் வந்தால் அதற்குப் பின்னால் கோஷம் எழுப்பிக் கொண்டு போய்விடுவோம். இரண்டு மாதங்களில் எல்லாம் மறந்து விடும். இதுதான் நமது வழக்கமாக இருந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே, வீடு உடைத்து திருடுகின்றவர்கள் முதல் தமது தொழிலில் திருடுகின்ற, தவறு செய்கின்ற, மோசடி செய்கின்றவர்கள் தொட்டு ஆட்சியில் ஊழல் செய்கின்றவர்கள் வரை, எல்லோர் விடயத்திலும் இலங்கையர்கள் ஒன்றுபட்டு, போராடாத வரை இவ்வாறான இழப்புகள் எல்லாம் தொடர்கதையாகவே இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும் வெற்றிலையை வாயில் குதப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள், மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பமான விடயமாகி விட்டது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# வீதியில் பயணிப்போர் அச்சம்

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் உள்ள உள்ளூர் வீதியோரங்களில் வளர்ந்து காணப்படும் மரங்களால் வீதியில் பயணிக்கும் பயணிகளும் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


கடந்த பல வருடங்களாக வீதிகளுக்கு அருகாமையில் உள்ள வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் நடப்பட்ட மரக்கன்றுகள், தற்போது வளர்ந்து அவற்றின் கிளைகளும் இலைகளும் வீதியில் மத்திய பகுதிக்கு வந்துள்ளன.

இதனால் விசேடமாக தென்னை மரங்களிலிருந்து திடீரென விழும் தேங்காய், காய்ந்த ஓலைகள், பாளை என்பவற்றால் வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி உபாதைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

அத்துடன் வீதியோரங்களில் உள்ள மின்கம்பிகள் மற்றும் தொலைபேசி வயர்களில் மரக்கிளைகள் தொட்டுக்கொண்டு காணப்படுவதாலும் சில வேளைகளில் விழுந்த ஓலைகள் இவற்றில் தொங்கிக்கொண்டு காணப்படுவதனாலும் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்

# ரித்திகா சிங் ஐட்டம் டான்ஸ்




பிரபல குத்துச்சண்டை வீராங்கனையான ரித்திகா சிங் 'இறுதிச்சுற்று' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானார்.

இதனை அடுத்து அவர் விஜய் சேதுபதியின் 'ஆண்டவன் கட்டளை' ராகவா லாரன்ஸ் நடித்த 'ஷிவலிங்கா' அசோக் செல்வனின் 'ஓ மை கடவுளை' ஆகிய திரைப்படங்களில் நடித்தார்.

அண்மையில் விஜய் ஆண்டனியின் 'கொலை' படத்தில் நாயகியாக நடித்திருந்தார்.

இந்த நிலையில் துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி வரும் 'கிங் ஆப் கோதா' என்ற படத்தின் தமிழ் பதிப்பான 'கலாட்டாகாரன்' என்ற படத்தில் இடம்பெற்ற ஒரு ஐட்டம் பாடல் அண்மையில் வெளியான நிலையில் அதில் துல்கர் சல்மானுடன் இணைந்து ரித்திகா சிங் ஆடி உள்ளார்.

துல்கர் சல்மான், ஐஸ்வர்யா லட்சுமி, டான்சிங் ரோஸ் சபீர், பிரசன்னா, அனிகா சுரேந்திரன் உள்பட பலர் நடிப்பில் உருவாகிய இந்த படத்தை அபிலாஷ் ஜோஸ்லே என்பவர் இயக்கியுள்ளார்.



# அதுப்போன்று நடிக்க மாட்டேன்.. மாளவிகா அதிரடி

துல்கர் சல்மான் நடிப்பில் கடந்த 2013-ஆம் ஆண்டு மலையாளத்தில் வெளியான 'பட்டம் போல' படத்தின் மூலம் திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமானவர் மாளவிகா மோகனன்.

பின்னர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினி நடித்த பேட்ட படம் மூலம் தமிழில் களம் இறங்கினார்.

இதையடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான மாஸ்டர் படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார்.

இந்நிலையில் நடிகை மாளவிகா மோகனன் படங்களை தேர்வு செய்வது குறித்து மனம் திறந்து பேசியுள்ளார். அதில், இனிமேல் எனது கதாப்பாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் மட்டுமே நடிப்பது என முடிவு செய்துள்ளேன்.

ரூ.500 கோடி வசூலிக்க கூடிய படமாக இருந்தாலும் எனது கதாப்பாத்திரத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அதில் நான் நடிக்க மாட்டேன்.

படம் ஓடி வசூலில் சாதனை படைத்தாலும் முக்கியத்துவம் இல்லாத கதாப்பாத்திரமாக இருந்தால் யாரும் நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று மாளவிகா மோகனன் பேசியுள்ளார்.



# நயன்தாரா குழந்தைகளுக்கு என் மடியில் தான் காதுகுத்து



நயன்தாராவின் குழந்தைகளுக்கு தனது மடியில் வைத்து தான் காதுகுத்து நடக்கும் என்று எதிர்பார்ப்பதாக நடிகர் சந்தானம் தெரிவித்துள்ளார்.

சந்தானம் நடித்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' என்ற திரைப்படம் வெளியாகி நல்ல வரவேற்பு பெற்ற நிலையில் ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த சந்தானம், பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொண்டார்.

நயன்தாராவுடன் உள்ள உறவு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நிலையில் 'வல்லவன்' திரைப்படத்தில் நடித்த காலத்திலிருந்து நயன்தாராவை தனக்கு நன்றாக தெரியும் என்றும் தனக்கும் அவருக்கும் உள்ளது அண்ணன் தங்கை உறவு என்றும் சினிமா துறையில் தனக்கு கிடைத்த ஒரு தங்கை என்றும் கூறினார்.

மேலும் அஜித் நடிப்பில் விக்னேஷ் சிவன் இயக்க இருந்த படத்தில் தனக்கு ஒரு முக்கிய கேரக்டர் இருந்ததாகவும் அந்த கேரக்டர் குறித்து பேசுவதற்கு அவருடைய வீட்டுக்கு சென்றபோது தடபுடலாக விருந்து வைத்தனர் என்றும் கூறினார்.

அவருடைய இரண்டு குழந்தைகளை தான் வாழ்த்தியதாகவும் தனது மடியில் வைத்து தான் காது குத்த வேண்டும் அப்போதுதான் தாய்மாமன் சீர் செய்வேன் என்று நகைச்சுவையாக கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




## அருள் பாஸ்கரனின் சித்திரக்கலைக்கூடம்

ஓவியர் அமரர் அருள்பாஸ்கரனின் 04ஆவது நினைவுதினம் திருகோணமலை இந்துக்கல்லூரி ஆரம்பப் பிரிவு கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) காலை முதல் மாலை வரை சிறப்பாக நடைபெற்றது. நினைவுதினத்தை முன்னிட்டு அருள்பாஸ்கரன் சித்திரக்கலைக் கூடம் மற்றும் யஷா சித்திரக் கலைக்கூடம் ஆகியன இணைந்து மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டு, சிறப்பாக சித்திரக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தி இருந்தார்கள். பங்குபற்றிய மாணவர்களுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணியும் கௌரவ விருந்தினராக இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மா.இராசரெத்தினமும் கலந்து சிறப்பித்தார்கள்.

அ.அச்சுதன்




## ஆடி தேர் திருவிழா

வரலாற்று பிரசித்திப்பெற்ற புளத்சிங்கள மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆடி தேர் திருவிழா சனிக்கிழமை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை தொடர்ந்து 12 நாட்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

சிவா ஸ்ரீதரராவ்




## கலந்துரையாடல்

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது மற்றும் எதிர்கால தேர்தல்களை முகங்கொடுப்பது சம்பந்தமாக மூதூர் தொகுதி கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிமை (30) மாலை இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சி தலைவரின் செயலாளர் வருண தகநாயக்க உட்பட கட்சி அமைப்பாளர்கள், முகாமையாளர்கள், உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஹஸ்பர்




## தேர் பவனி

சின்ன கதிர்காமம் என்றழைக்கப்படும் பசறை அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆடிப்பூர தேர் பவனி ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது. இதில், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷும் பங்கேற்றார்




## 'கனவு மெய்ப்படுகின்றது' செயலமர்வு

மூளையினை ஊடுருவுவது எப்படி? என்பதை அறிந்து கொள்ளும் 'கனவு மெய்ப்படுகின்றது' எனும் தலைப்பிலான ஒரு நாள் செயலமர்வு மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது. பெண்கள் மேம்பாட்டு அமையம் மற்றும் கல்முனை லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையோடு கனவு மெய்ப்படுகின்றது அமைப்பின் ஸ்தாபகர் மனித உரிமை செயற்பாட்டாளர் திருமதி நளினி ரெட்ணராஜா ஒருங்கிணைப்பில் முற்றும் முழுதாக இலவசமாக நடாத்தப்பட்டது.

வி.சுகிர்தகுமார்




## விஷேட கலந்துரையாடல் நிகழ்வு

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் செயற்பட்டு வரும் சிவில் பாதுகாப்புக் குழு பிரதிநிதிகளுடனான விஷேட கலந்துரையாடல் நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிமை (30) இடம்பெற்றது அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி டபள்யூ.எஸ்.ஏ.சதாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பொலிஸ் உயரதிகாரிகள், சர்வமத தலைவர்கள், சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

எம்.ஏ.றமீஸ்

‘பற்றிக்கோட்டா செமினரி’, ‘யாழ்ப்பாண கல்லூரி’: 200 ஆண்டு நிறைவைக் கொண்டாடிய பழைய மாணவர்கள் – 15 ஜூலை முதல் 22 ஜூலை வரை

# இலக்கின் தூரம் குறைந்தது

## ‘மீண்டும் பள்ளிக்கூடம் போகலாம்; நம்மை நாம் அங்கு தேடலாம்’



பஸ்தியாம்பிள்ளை யோண்சன்

(நேற்றைய தொடர்ச்சி)

### ‘கல்லூரி வசந்தத்தில்’ – திரைக்காட்சி (18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை)

“தென்இந்திய திரைப்படங்களுக்கு நிகரானது” என்று பேராசிரியர் சிவத்தம்பி விமர்சனம் செய்திருந்த, ‘கல்லூரி வசந்தத்தில்’ என்ற திரைப்படம், 1984ஆம் ஆண்டு யாழ்ப்பாண கல்லூரி தயாரித்து வெளியிட்டிருந்தது. இந்தத் திரைப்படம் ‘ஒட்லி’ மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை மாலை வேளை திரையிடப்பட்டிருந்தமை, பழைய மாணவர் வாரத்தை மேலும் சிறப்பாக்கி இருந்தது. படத்தைப் பார்த்தவர்களின் புளகாங்கிதத்தில் இருந்து இதை அறிந்துகொள்ள முடிந்தது.

தமிழ் மன்றத்தின் வழிகாட்டலில் வெளிவந்த இத்திரைப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், கலை, உடை போன்ற பொறுப்புகளை ஏற்று, வீ.எஸ் நேசானந்தர் என்ற உயர்தர மாணவன், திரைப்படத்துக்கு உயிரோட்டம் அளித்திருந்தார். வித்தி என்பவர் படப்பிடிப்பு, இசையமைப்பு, படத்தொகுப்பு போன்ற பொறுப்புகளை ஏற்றிருந்தார்.

பாடசாலை வாழ்க்கையின், இளமைப் பருவத்தின் இதயச் சலனங்களை தத்ரூபமாகச் சித்திரிக்கும் இத்திரைப்படம், கல்லூரி விடுதி வாழ்க்கை, மாணவப் பருவ குறும்புகள் என்பவற்றையும் யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துகின்றன.

1983ஆம் ஆண்டு, நாட்டில் நெருக்கடிகளும் குழப்பநிலைகளும் மிகுந்திருந்த காலப்பகுதியில், இத்திரைப்டத்தின் படப்பிடிப்பு மற்றும் ஏனைய பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இன்றைய நவீன தொழில்நுட்ப வசதிகள் எதுவும் இல்லாத அக்கால கட்டத்தில், மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த நிலைமையிலும் படத்தொகுப்பு போன்ற பணிகள் எளியமுறையில் கையாளப்பட்டன. உதாரணமாக, புறச்சூழல் சத்தங்கள் தாக்கம் செலுத்தாதவாறு, ஓர் ஒலிப்பதிவு கூடத்துக்குள் செய்ய வேண்டிய பணிகளை, இரவு 11 மணிக்குப் பின்னர், வித்தியின் வீட்டின் சமயல் அறை புகைக்கூண்டுக்கு கீழ் இருந்து செய்து முடிக்கப்பட்ட சுவாரஷ்ய கதைகளும் இந்தப் படத்தின் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ளன. இதனால் வீதியில் செல்லும் வாகனங்களின் இரைச்சல் சத்தம் இடையூறு செய்வது தவிர்க்கப்பட்டது. இவ்வாறு பல சவால்கள், இன்னல்களுக்கு முகம்கொடுத்து, இத்திரைப்படம் உருவாக்கப்பட்டது.

இத்தகைய வரலாற்றுச் சாதனைக்கு, அன்றைய அதிபர் ராஜன் கதிர்காமர் மனமொத்த ஆக்கமும் ஊக்கமும் அளித்திருந்ததுடன் அவரும் திரைப்படத்தில் நடித்திருந்தார். மாணவர்களுடன் கல்லூரியின் ஆசிரிய குழாமும் இத்திரைப்படத்தில் நடித்திருந்தார்கள் என்பது பெருமைக்குரிய அம்சமாகும். ஜீவா டீச்சர், ஜெபநேசன் மாஸ்டர், ஜெயராஜா மாஸ்டர், சதாசிவம் மாஸ்டர், நடராஜா மாஸ்டர், எலியாஸ் டீச்சர், இராஜசிங்கம் மாஸ்டர், தர்மன் மாஸ்டர் ஆகியோர் ‘கல்லூரி வசந்தத்தின்’ ஊடாகவும் பேசப்படுகின்றார்கள்.

இத்திரைப்படத்தில் நடித்தவரும் இன்றும் ஆசிரியராக கடமையாற்றுபவருமான ஜெயராஜா மாஸ்டர், படத்தில் நடித்த தமது அனுபவத்தை பகர்ந்துகொள்ளும் போது இவ்வாறு கூறினார். “மாணவரின் முயற்சிக்கு ஒத்தாசையாக இருந்து ஊக்குவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே, நான் பொலிஸ் வேடத்தில் நடிப்பதற்கு சம்மதித்தேன்” என்றார்.

“படத்தைப் பார்த்ததன் பின்னர், எங்கள் பாடசாலை வாழ்க்கையின் பசுமையான நினைவுகளை, வருடிச் சென்றது போன்ற அனுபவங்களை பெற்றோம்” என்று ஆனந்தக் கண்ணீர் மல்க பழைய மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.










### கருத்துப்பகர்வும் பொதுக்கூட்டமும் (19ஆம் திகதி புதன்கிழமை)

கருத்துப்பகர்வும் பொதுக்கூட்டம் என்ற இந்த நிகழ்வு, இரண்டு பகுதிகளாக ‘ஒட்லி’ மண்டபத்தில் மாலை ஆறு மணியளவில் ஆரம்பமானது.

கருத்துப்பகர்வு நிகழ்வில், யாழ்ப்பாண கல்லூரி இரண்டு நூற்றாண்டுகளாக முன்னெடுத்த கல்விப்பணி மற்றும் எதிர்காலத்துக்கான பார்வையும் பாதையும் என்ற வரையறைக்குள் கருத்துகள் பகர்ந்து கொள்ளப்பட்டன.

கல்லூரியின் அதிபர் திருமதி ருஷிறா குலசிங்கம் தலைமையில் உரையாளர்களாக நால்வர் தமது கருத்துகளைப் பகர்ந்து கொண்டனர். யாழ்ப்பாண கல்லூரியின் முன்னாள் அதிபரும் தென்இந்திய திருச்சபை யாழ். ஆதினத்தின் முன்னாள் பேராயருமான அதி. வண. கலாநிதி எஸ். ஜேபநேசன், கல்லூரியின் வரலாற்றை மைல்கற்களாக குறிப்பிட்டார்.

‘கிறிஸ்தவப் பாடசாலைகளும் ஜனநாயகத்தை உருவாக்குதலும்’ என்ற தலைப்பில், மட்டக்களப்பு பரி. யோவான் தொழிற்பயிற்சி நிலையத்தின் இயக்குநர் கலாநிதி தர்சன் அம்பலவாணர் உரையாற்றியிருந்தார். கல்வி, நிகழ்ச்சிகள், மாணவர்களை அனுமதிக்கும் கொள்கை போன்றவற்றின் ஊடாக, எத்தகைய மட்டத்தில் ஜனநாயகத் தன்மையை கல்லூரி பேணுகின்றது என்பதை பல உதாரணங்கள் மூலம் விளக்கியதுடன், ஜனநாயக உருவாக்கத்துக்கு கல்லூரி எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்தும் விவரித்திருந்தார்.

‘தொடர் கற்றல் மூலம் 21ஆம் நூற்றாண்டுக்காக எம்மைத் தயார்படுத்தல்’ என்ற தலைப்பில், உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமாகிய திருமதி ஷிராணி மில்ஸ் கருத்துகளைப் பகர்ந்துகொண்டிருந்தார். 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவாறு மாணவர்களுக்கு எத்தகைய திறமைகளையும் தகுதிகளையும் வழங்க வேண்டும் என்பது குறித்தும் யாழ்ப்பாண கல்லூரி, கலவன் பாடசாலையாகத் திகழ்வதுடன் அது எவ்வாறு பால்நிலை சமத்துவத்தைப் பேணுகின்றது; பால்நிலை சமத்துவம் குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு ஏற்படுத்தி வருகின்றது என்பது குறித்தும் விளக்கியிருந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கணினி விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கெங்காதரஜயர் சர்வேஸ்வரன், ‘எதிர்காலத்துக்கு தயாராகுதலும் திறன்களும் தொழில்நுட்பங்களும்’ என்ற தலைப்பில் கருத்துகளைப் பகர்ந்துகொண்டார். குறிப்பாக, நவீன தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு (AI), கட்புலன் சார்ந்த தொழில்நுட்பங்கள் போன்றவை இன்றைய காலகட்டத்தில், ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன? இவற்றுக்கும் இன்றைய கல்வி முறைக்கும் எத்தகைய தொடர்பு இருத்தல் வேண்டும் என்பன குறித்தும் விளக்கி இருந்தார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ‘யாழ்ப்பாண கல்லூரியின் இரண்டு நூற்றாண்டு கல்விப் பணியும் கூட்டிணைவுடன் எதிர்காலத்தைச் சிந்தித்தலும்’ என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் ஒருங்கமைப்பாளராக, யாழ்ப்பாண கல்லூரி ஆளுநர் சபைக்கான பழைய மாணவர் பிரதிநிதியான தேவராஜா







எதிராஜ் செயற்பட்டிருந்தார்.

ஆரம்ப உரைகளை, தென்இந்திய திருச்சபையின் யாழ். ஆதினத்தின் பேராயரும் யாழ்ப்பாண கல்லூரி ஆளுநர் சபையின் தவிசாளருமான அதிவணக்கத்துக்குரிய அருட்கலாநிதி வே. பத்மதயாளன் ஆண்டகையும் யாழ்ப்பாண கல்லூரியின் அதிபர் திருமதி ருஷிறா குலசிங்கமும் ஆற்றியிருந்தனர். “கனவு காணுங்கள்” என்று கூறிய விஞ்ஞானி அப்துல் கலாம், இந்தியா சீருடனும் சிறப்புடனும் திகழ்ந்து, முதன்மை ஸ்தானத்தை அடைவது குறித்து கனவு கண்டார். அதேபோல்த்தான், பேராயரும் அதிபரும் தமது உரைகளில், யாழ்ப்பாண கல்லூரி குறித்த தமது ‘கனவு’களை பதிவுசெய்திருந்தனர்.

இந்த உரைகளைத் தொடர்ந்து, கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பங்கேற்ற, திறந்த உரையாடல் இடம்பெற்றிருந்தது. இதில், கல்லூரியில் எவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன - என்ன செய்ய வேண்டும்? வறிய மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு உரிய புலமைப்பரிசில்களை வழங்குவது குறித்த திட்டம், ஆய்வுகூடங்களை உலகத் தரம்வாய்ந்தவையாக உருவாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்? கணினி ஆய்வுகூடத்தை எவ்வாறு உச்சபயன்பாடு மிக்கதாக மாற்றுவது? ‘ஒன்லைன்’ கற்பித்தலில் மாணவர்களை எவ்வாறு பங்குபெறச் செய்யலாம்? வெளிநாட்டில் வாழும் வளவாளர்களின் சேவைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது போன்ற கல்லூரியின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து, சிந்திக்கத் தூண்டி இருந்தன. அதுமட்டுமல்லாமல், இவற்றை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கும் வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டு, புதன்கிழமை மாலை, பொன்னான பொழுதாகக் கடந்திருந்தது.

### பழைய மாணவர்களின் கலை நிகழ்வுகள் (20ஆம் திகதி வியாழக்கிழமை)

பழைய மாணவர்கள் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் களமாக இந்த மாலைப்பொழுது அமைந்திருந்தது. கோலாட்டம், புஸ்பாஞ்சலி, வில்லுப்பாட்டு, நாடகம், ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மொழிகளிலான பாடல்கள் எனப் பல நிகழ்ச்சிகளை நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் அளிக்கை செய்திருந்தார்கள்.

### உணவுத் திருவிழாவும் கிரிக்கெட் போட்டிகளும் (வெள்ளிக்கிழமை 21)

‘பிக்னல்’ மைதானம், ‘காணிவல்’ போன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. வட்டுக்கோட்டை கிராமத்தைச் சூழவுள்ள அயலூர்களில் பாரம்பரிய உணவு தயாரிப்பாளர்களை அழைத்து வந்து, இந்த உணவுத் திருவிழா ஒருங்கமைக்கப்பட்டது. சங்கானை பிரதேச சபை இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பத்துக்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களில் குடாநாட்டின் பாரம்பரிய கலாசார உணவு வகைகள், சிற்றுண்டிகள், பானங்கள் போன்றவை இங்கு விற்பனை செய்யப்பட்டன.

பிட்டு, இடியப்பம், தோசை, பாலப்பம், கொத்துரொட்டி, வடை வகைகள், சிப்ஸ் வகைகள், மிக்ஷர் வகைகள் போன்ற உணவுகளும் சர்பத், மோர், போத்தலில் அடைக்கப்பட்ட கற்றாளைச் சாறு போன்றவையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளத் தக்கதாக இந்த உணவுத் திருவிழா அமைந்திருந்தது.

இங்கு கிடைக்கப்பெற்ற சகல உணவுப்பொருட்களும் பானங்களும், சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தயாரிக்கப்பட்டு தரமாக இருந்தமையால், விதம்விதமான உணவுப் பொருட்களை பழைய மாணவர்கள் வாங்கி ருசித்து, மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இதேவேளை, மைதானத்தில் சிரேஷ்ட - கனிஷ்ட அணிகளுக்கு இடையிலான 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது. 2000 ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்கள், அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் என்ற அடிப்படையில் அணி பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு அணிகளிலும் பெண்களும் பங்கெடுத்துக் கொண்டமை சிறப்பம்சமாகும்.

### பரிசளிப்பு விழா (சனிக்கிழமை 22ஆம் திகதி)

இம்முறை நடைபெற்ற பரிசளிப்பு விழா இரண்டு அம்சங்களில் முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது. முதலாவது, கொவிட்-19 பெருந்தொற்று, நாட்டில் பொதுவாக நிலவிய பொருளாதார நெருக்கடி, போன்ற காரணங்களால் 2020, 2021, 2022 ஆகிய மூன்று வருடங்களும் நடத்த முடியாமல் போன பரிசளிப்பு விழா இம்முறை, மூன்று வருடங்களையும் சேர்த்து நடத்தப்பட்டது.

அடுத்தது, யாழ்ப்பாண கல்லூரியின் 200 வருட கல்வி - சமூகப் பணிகளை நினைவுகூர்ந்து கொண்டாடப்படும் பழைய மாணவர் வாரத்தின் இறுதி நாளில், இந்தப் பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டமையானது வரலாற்றில் இடம்பிடித்து விட்டது எனலாம். யாழ்ப்பாண கல்லூரியின் அதிபர் றுஷிறா குலசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு விழாவில் இன்பஜோதி நித்தியராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த இன்பஜோதி, 1960 முதல் 1973 வரை யாழ்ப்பாண கல்லூரியில் பழைய மாணவராகத் திகழ்ந்தார். இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரியான அவர், தற்போது யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிபுணராகக் கடமையாற்றுகின்றார்.

முதலாவது நன்றியுரையை தற்போதைய மாணவத் தலைவர் பரமேஸ்வரன் பிரவீனனும் இரண்டாவது நன்றியுரையை டொக்டர் பிருந்தா சிவகாந்தனும் வழங்கியிருந்தார். டொக்டர் பிருந்தா 1992/1993 காலப் பகுதியில் மாணவத் தலைவராக செயற்பட்டிருந்தார். அத்துடன், முதலாவது பெண் மாணவத் தலைவி இவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

‘மீண்டும் பள்ளிக்குப் போகலாம்; நம்மை நாம் அங்கு தேடலாம்’ என்ற, தங்கர் பச்சனின் ‘பள்ளிக்கூடம்’ திரைப்படத்தில் வரும் இந்த வரிகளில் ஒளிந்திருப்பது, ஒவ்வொருவரினதும் பாடசாலைப் பருவ மாணவ வாழ்க்கையின் நினைவுகள் மட்டும் தான்!

இவ்வாறு குறித்த எட்டு நாள்களும் யாழ்ப்பாண கல்லூரி வளாகத்தில் பொழுதைப் பொன்போல் போக்கிய வாய்ப்பைப் பெற்றோரும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டோரும் பேறுபெற்றோர்; பாக்கியவான்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில், இந்த எட்டு நாள் நிகழ்வுகளும் அவர்கள் வாழ்க்கையில் என்றும் பசுமையான நினைவுகளாகப் படர்ந்திருக்கும்.

மொத்தத்தில், இத்தகைய பூரணத்துவம் மிக்கதும் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் உயர்நிலை பெறுபேறுகளையும் வழங்கியிருந்த பழைய மாணவர் வார நிகழ்வுகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் என்பன, யாழ்ப்பாண கல்லூரி தனது இலக்கை அடைவதற்கான தூரத்தின் அளவை, குறைத்திருக்கின்றன என்பது திண்ணம்.





## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

# 40 பேர் பலி; 200+ காயம்

பாகிஸ்தான் வடக்கு பகுதியில் உள்ள கைபர் பக்துன்வா மாகாணத்தின் பஜூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசியல் கட்சி மாநாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 40 பேர் பலி, 200-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜமியத் உலமா இஸ்லாம்-ஃபஸ்ல் (JUI-F) என்ற கட்சி சார்பில் கார் தாலுகாவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதில் அந்த காட்சியை சார்ந்த முக்கிய பிரமுகர்




ஒருவரும் உயிரிழந்துள்ளதாக தகவல். மாநாடு நடைபெற்ற பகுதிக்குள் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. தற்கொலை படை மூலம் இந்த சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. சம்பவ இடத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள மருத்துவமனைகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல். குண்டு வெடிப்பில் மோசமாக காயமடைந்தவர்களை ஹெலிகாப்டர் மூலம் பெஷாவர் கொண்டு சென்று சிகிச்சை வழங்கப்படுவதாக அந்த மாகாணத்தின் அமைச்சர் ஃபிரோஸ் ஷா ஜமால் தெரிவித்துள்ளார்.

## நாய் உடை அணிந்த யூ-டியூப் பிரபலம்



ஜப்பானை சேர்ந்த டோகோ எனும் யூ-டியூப் பிரபலம் ஒருவர் நாய் உடை அணிந்து பூங்காவில் வலம் வந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

இவர் சிறு வயது முதலே நாய்கள் மீது அதிக அன்பு கொண்டவர். நான் நாயாகவே பிறந்திருக்கலாம் என அடிக்கடி தனது நண்பர்களிடம் கூறி வந்துள்ளார். இந்நிலையில் நாயாக மாற வேண்டும் என்ற தனது கனவை நிறைவேற்றுவதற்காக அவர் இந்திய மதிப்பில் ரூ.12 இலட்சம் செலவு செய்து நாய் உடையை உருவாக்கி உள்ளார்.

பின்னர் அந்த உடையை அணிந்து கொண்டு நகரில் உள்ள பூங்காவில் வலம் வந்துள்ளார். பார்ப்பதற்கு நாய் போலவே தோன்றிய அவருடன் அப்பகுதியில் உள்ள நாய்கள் நட்பை வளர்த்து வருகின்றன.

டோகோ, 'ஐ வாண்ட் டு பி அனிமல்' என்ற யூ-டியூப் சேனலை நடத்தி வருகிறார். இவரது சேனலுக்கு 35 ஆயிரம் சந்தாதாரர்கள் உள்ளனர். இவரது நாய் தோற்ற உடையை அங்குள்ள பிரபல வணிக நிறுவனம் ஒன்று வடிவமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## சீனாவை புரட்டிய டொக்சூரி

சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் தைவான் உள்ளிட்ட நாடுகளை புரட்டி போட்ட டொக்சூரி புயலில் சிக்கி 39 பேர் உயிரிழந்துள்ளனர்.


பிலிப்பைன்ஸை தாக்கிய டொக்சூரி புயலின் போது பலத்த காற்று வீசியதால் வீடுகள் காற்றில் பறந்தன. மரங்கள், மின்கம்பங்கள் உள்ளிட்டவை பிடுங்கி வீசப்பட்டன. தொடர்ந்து, தென்கிழக்கு சீனாவை டொக்சூரி புயல் தாக்கியது.

கனமழையுடன் பலத்த காற்று வீசியதால் பல்வேறு இடங்களிலும் மரங்கள் சாலையில் விழுந்து போக்குவரத்து முடங்கிய நிலையில், ஃபுஜியான் மற்றும் குவாங்ஷோ மாகாணங்களை சேர்ந்த சுமார் 7 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் சுமார் 10 இலட்சம் பேர் இருளில் மூழ்கியுள்ளனர்.

## எரிபொருள் தீர்ந்ததால் பூமிக்கு திரும்பிய செயற்கைக்கோள்

லண்டன், ஐரோப்பிய செயற்கைக்கோள் ஒன்று அட்லாண்டிக் பெருங்கடலில் விழுந்துள்ளது. ஏயோலஸ் (Aeolus) என்று பெயரிடப்பட்ட இந்த செயற்கைக்கோள் 1,360 கிலோகிராம் எடையுள்ள வானிலை கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும். இது 2018ம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்டது. இதில் டாப்ளர் விண்ட் லிடார் எனப்படும் அதிநவீன லேசர் கருவியை கொண்டுள்ளது.

இது வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் காலநிலை மாதிரிகளை



மேம்படுத்த, ஐரோப்பா முழுவதும் வானிலை மையங்களுக்கு தரவுகளை வழங்கி ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியது. ஏயோலஸ் செயற்கைக்கோளில் கடந்த மே மாதம் எரிபொருள் தீர்ந்ததால், அதன் சுற்றுப்பாதையை பராமரிக்க முடியவில்லை என கூறப்படுகிறது.

இதனால், ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) விண்வெளியில் உள்ள மற்ற விண்கலம் அல்லது செயற்கைக்கோளுடன் மோதும் அபாயத்தை குறைக்க செயற்கைக்கோளை வேண்டுமென்றே கடலில் மோத செய்தாக கூறப்படுகிறது.

## 306 அரியவகை உயிரினங்கள் சிக்கின



தாய்லாந்து நாட்டில் இருந்து விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட 306 அரியவகை உயிரினங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மும்பை விமான நிலையத்திற்கு அரியவகை உயிரினங்கள் கடத்தி வரப்பட்டு உள்ளதாக வருவாய் புலனாய்வு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன்பேரில் அதிகாரிகள் சரக்கு பொதி பிரிவிற்கு சென்று சோதனை செய்தபோது பொதி வெளிநாட்டை சேர்ந்த 306 அரியவகை உயிரினங்கள் உயிருடன் அடைத்து வைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் 100-க்கும் மேற்பட்ட சிறியவகை ஆமைகள், 110 நத்தைகள், 30 நண்டுகள் போன்றவை அடங்கும். அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து அரியவகை உயிரினங்களை கடத்த முயன்ற நபர் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சுடுகாட்டில் நடந்த திருமணம்



மும்பை, அகமதுநகர் அருகே சுடுகாட்டில் திருமணம் செய்து கொண்ட வினோத சம்பவம் நடந்து உள்ளது. சுடுகாட்டில் திருமணம் கோவில்களில் நடந்த திருமணங்கள் மண்டபங்களுக்கு மாறிய நிலையில், சமீப காலமாக பலர் நூதன முறையில் திருமண விழாக்களை வடிவமைக்க விரும்புகிறார்கள். சிலர் கடலில் கூட திருமணம் செய்து கொள்கிறார்கள். இந்நிலையில் மராட்டிய மாநிலத்தில் சுடுகாட்டில் வினோத திருமணம் அரங்கேறியுள்ளது.

அகமதுநகர் மாவட்டம் ரகாதா பகுதியை சேர்ந்தவர் கங்காதர் கெய்க்வாட். இவர் 20 ஆண்டுகளாக ரகாதாவில் உள்ள சுடுகாட்டில் வேலை செய்து வருகிறார். இவரது மகள் மயூரி திருமணம் தான் அவர் வேலை செய்து வரும் சுடுகாட்டிலேயே நடந்து உள்ளது. திருமணத்தில் குடும்பத்தினர், ஊர் மக்கள், சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு மணமக்களை மனதார வாழ்த்தினர்.

## தகாத உறவால் மகளை கொன்ற தாய்

தெலுங்கானா மாநிலம், ஐதராபாத் தராபாத், குஷாய் குடாவை சேர்ந்தவர் ரமேஷ். கார் டிரைவர். இவரது மனைவி கல்யாணி (வயது 22). இவர்கள் 2018 இல் காதல் திருமணம் செய்து கொண்டனர்.

தம்பதிக்கு தன்விதா என்ற 4 வயது பெண் குழந்தை உள்ளது. கருத்து வேறுபாடு காரணமாக தம்பதிகளுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இந் நிலையில் கடந்த 2021-ம் ஆண்டு இருவரும் பிரிந்தனர். கல்யாணி செங்கன் மாவட்டத்தில் உள்ள தனது பெற்றோர் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்காக சென்றபோது அதே ஊரை சேர்ந்த நவீன் குமார் (19) என்ற வாலிபருடன் தகாத உறவு ஏற்பட்டுள்ளது.

பெற்றோர் வீட்டில் இல்லாத நேரத்தில் தாய் வீட்டிற்கு சென்று நவீன் குமாருடன் கல்யாணி உல்லாசமாக இருந்து வந்துள்ளார். இவர்களது தகாத உறவுக்கு மகள் தடையாக இருப்பதாக இருவரும் எண்ணியதால். வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்த சிறுமியின் கழுத்தை நெரித்து தாய் கொலை செய்துள்ளார்.

மகளின் மரணத்தில் சந்தேகம் அடைந்த தந்தை இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து. பொலிஸார் கல்யாணியை கைது செய்தனர்.

## எல்.பி.எல்: கொழும்பு ஸைரக்கர்ஸை

# வென்ற ஜஃப்னா கிங்ஸ்



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கானது (எல்.பி.எல்) நேற்று முன்தினம் ஆரம்பமாகியிருந்த நிலையில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் கொழும்பு ஸைரக்கர்ஸை நடப்புச் சம்பியன்களான ஜஃப்னாஸ் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஸைரக்கர்ஸ்

கிங்ஸ்: 173/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தௌஹிரி ஹிரிடோய் 54 (39), டுனித் வெல்லலாகே ஆ.இ 25 (23), பிரியமால் பெரேரா 22 (16), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 21 (11), திஸர பெரேரா ஆ.இ 14 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் நவாஸ் 0/24 [4], மதீஷ பத்திரண 1/32 [4], லக்ஷன் சந்தகான் 1/34 [4])

ஸைரக்கர்ஸ்: 152/10 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிரோஷன் டிக்வெல்ல 58 (34), சாமிக கருணாரத்ன 23 (15), ரமேஷ் மென்டிஸ் 17 (10), நுவனிடு பெர்ணாண்டோ 17 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹார்டஸ் விலோஜின் 3/31 [4], விஜயகாந்த் வியாஸ்காந்த் 2/17 [4], டில்ஷான் மதுஷங்க 2/18 [2.4])

போட்டியின் நாயகன்: விஜயகாந்த் வியாஸ்காந்த்




## மேஜர் லீக் கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான மும்பை நியூ யோர்க்

ஐக்கிய அமெரிக்காவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ் நியூ யோர்க் சம்பியனானது.

டலாஸில் நேற்றுக் காலை நடைபெற்ற சியட்டில் ஓர்காஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே நியூ யோர்க் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ஓர்காஸ், குயின்டன் டி கொக்கின் 87 (52), ஷுபம் ரஞ்சனேயின் 29 (16), டுவைன் பிறிட்டொறியஸின் 21 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ரஷீட் கான் 4-0-9-3, ட்ரெண்ட் போல்ட் 4-0-34-3, ஸ்டீவன் டெய்லர் 4-0-25-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 184 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூ யோர்க், பதிலணித்தலைவர் நிக்கலஸ் பூரானின் ஆட்டமிழக்காத 137 (55) ஓட்டங்களோடு 16 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், இமாட் வஸீம் 2-0-14-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் பூரான் தெரிவானார்.

## ஓய்வு பெற்ற டியோ கொடின்



உருகுவேயின் முன்னாள் அணித்தலைவரான டியகோ கொடின், கால்பந்தாட்டத்திலிருந்து நேற்று முன்தினத்துடன் ஓய்வு பெற்றுள்ளார்.

பருவகாலத்தில் இறுதி ஆர்ஜென்டீனா லீக் போட்டியான வெலெஸ் சர்ஸ்பீல்ட் 0-1 என்ற கோல் கணக்கில் ஹுர்கானுடன் தோல்வியடைந்த போட்டியைத் தொடர்ந்தே 37 வயதான கொடின் ஓய்வு பெற்றுள்ளார்.

அந்தவகையில் மொத்தமாக 627 போட்டிகளில் விளையாடிய கொடின் 38 கோல்களைப் பெற்றுள்ளதுடன், 10 பட்டங்களை வென்றுள்ளார்.

## தேசிய எல்லே போட்டியில்

# மூன்றாமிடம் பெற்ற கிழக்கு மாகாணம்

**எம்.எஸ்.எம். நூர்தீன்**



47ஆவது தேசிய விளையாட்டு விழாவின் எல்லே போட்டிகள் பொலன்னறுவை விளையாட்டு மைதான தொகுதியில் அண்மையில் நடைபெற்றபோது மூன்றாமிடத்துக்கான போட்டியில் தென் மாகாணத்தை வென்று மூன்றாமிடத்தை கிழக்கு மாகாணம் பெற்றது.

## தேசிய கிரிக்கெட் அணியில் தெரிவு செய்யப்பட்ட

# மாணவிக்கு யாழில் கௌரவிப்பு

**எஸ். நிதர்ஷன்**



19 வயது பிரிவிற்குட்பட்ட தேசிய பெண்கள் கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிக்கான கௌரவிப்பு நிகழ்வானது சுழிபுரம் பாண்டவெட்டை காட்டுபுலம் இணைந்த கரங்கள் அமைப்பின் தலைவர் இராசேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் 19 வயதுக்குட்பட்பட் 30 பேர் அடங்கிய குழுவில் தெரிவு செய்யப்பட்ட சுழிபுரம விக்ரோறியா கல்லூரி மாணவி செல்வராசா கிருஸ்ரிகாவிற்கான கௌரவிப்பை, நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் வழங்கி வைத்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 01 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.